# இந்தியத் துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்

## <u>ஊடக அறிக்கை</u>
## <u>நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 18வது நினைவு நாள் நிகழ்வு</u>

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் தலைசிறந்த திரைப்பட நடிகர் நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்களின் 18வது நினைவு நாள் நிகழ்வு இன்று (21.07.2019) மாலை 5.00 மணியளவில் தூதரக வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இவ் நினைவுநாள் நிகழ்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் ஐ.தர்மகுலசிங்கம், மற்றும் அவர்தம் பாரியார், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு லலிசன், முனைவர் மோகன், உள்ளூர் கலைஞர்கள், தூதரக அதிகாரிகள், ஊடகவியாளர்கள் உட்பட படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை 100ற்கும் மேற்பட்ட அவரின் ரசிகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் நடிகர் திலகத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மரியாதை செலுத்தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து சிவாஜி கணேசனின் நடிப்பாற்றலைப் பற்றி பிரபலங்களின் கருத்துத் தொகுப்பு ஆவணக் காணொளி காட்சிப்படுத்தப்பட்டது. நிகழ்வில் உரையாற்றிய துணைத் தூதுவர் நடிகர் திலகத்தின் நடிப்பாற்றலைப் நினைவுகூர்ந்தார்.

நிகழ்வில் உள்ளூர் இசைக் கலைஞர்கள் வழங்கிய இசை நிகழ்வில் நடிகர் திலகத்தின் புகழ்பெற்ற பாடல்கள் பாடப்பட்டன.

***21 யூலை, 2019***
***யாழ்ப்பாணம்***